Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள்தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 12    ( 25 - 05 - 1992 )    திங்கட்கிழமை    ஓசை: 97

## ஐ. நா. அதிகாரிகள் யாழ். வந்துள்ளனர்

நாடு திரும்பிய அகதிகளுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி ஆராய அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரிகள் இருவர் யாழ். வந்து சேர்ந்தனர். இவர்கள் இருவரும் இன்று காலை விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களைச் சந்தித்து இதுவிடயம் குறித்து ஆராய்வர் எனத்தெரிவிக்கப்படுகிறது. கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் அகதிகளாக தமிழ் நாட்டில் தஞ்சமடைந்திருந்த பலர் தற்போது அங்கிருந்து திருப்பி (5 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் துணிகர தாக்குதல்

# மணலாற்றில் 6 ராணுவம் பலி;

## காவலரண் முற்றாகத் தகர்ப்பு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் முந்திரிகைக்குள இராணுவ முகாம் காவலரண்மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் துணிகர அதிரடித்தாக்குதல் ஒன்றை நடத்தினர், இத்தாக்குதலில் காவலரண் கைப்பற்றப்பட்டதோடு, அதிலிருநத இராணுவத்தினரில் ஆறுபேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது. நேற்று காலை 5. 40 மணியளவில் மணலாறு முந்திரிகைக்குள இராணுவ முகாமிற்கும் மண்கிண்டி இராணுவ முகாமிற்கும் இடையிலுள்ள இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகள் ஓர் அதிவேக அதிரடி தாக்குதல் ஒன்றை தொடுத்தனர். நாலு நிமிடங்கள் நடைபெற்ற அதி (6 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் ராணுவம்மீது தாக்கு; ஒரு போராளி வீரச்சாவு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் பச்சைநூல் இராணுவ முகாமிலிருந்து ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடந்த சனியன்று காலை 6.50 மணியளவில் பச்சைநூல் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்த ஆயத்த நிலையில் இருந்தனர்.

இந்தவேளையில் வழமைக்கு மாறாக வேறு பாதையால் வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர் இத்தாக்குதலின்போது இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

விடுதலைப்புலிகள் தரப்பில் கப்டன் மதியழகன் (அரி, ஏகாம்பரம் கெங்காதரன், சிவன் வீதி, திருமலை) எனப (6 ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் நேற்று விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இராணுவக் காவலரண் மீதான தாக்குதலின் போதுகைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஏ. கே. எல்.எம். ஜி - 01
★ ரம் மகசின் - 01
★ ரி-56-2ரகதுப்பாக்கி - 03
★ ரி-81 ரகதுப்பாக்கி - 01
★ ரி-56 புதியரக துப்பாக்கி - 01
★ ரி-56 மகசின் - 10
★ ரி-81 மகசின் - 03
★ நடுத்தர ரவைகள் - 1070
★ நடுத்தர ரவைகள் லிங்குடன் - 560
★ கறுப்பு ஜே. ஆர் கைக்குண்டு - 11
★ ஜே. ஆர் கைக்குண்டு - 02
★ சின்ன கிளைமோர் - 02
★ வயர் ரோல் - 02
★ கிளைமோர் வெடிக்க வைக்கும் கருவி - 02
★ கிட்பாக் - 02
★ தொப்பி - 03
★ மழை அங்கி - 03
★ தலைக்கவசம் - 03
★ சப்பாத்து - 02 சோடி
★ ஜேர்ஸ்- - 05
★ தண்ணீர்ப் போத்தல் - 02

## பழுகாமத்தில்தேடுதல்வேட்டை பத்துக்கு மேற்பட்டோர் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டம் பழுகாமத்தில் கடந்த வெள்ளி முழுநாளும் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் 10 க்கு மேற்பட்ட தமிழ்மக்கள் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். தமிழரின்வீடுகள் சூறையாடப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமைதற் பொழுது தமிழ்மக்கள்செறிந்து வாழும் பழுகாமக்கிராமத்தில சிறிலங்கா இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் தேடுதல்வேட்டையைநடாத்தினர்

200க்கு மேற்பட்ட இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் இத்தேடுதல் வேட்டையில்ஈடுபட்டனர். இதன்போது தமிழ் மக்களின் ஏராளமான உடைமைகள் சூறையாடப்பட்டன 10க்குமேற்பட்டவர்கள் இராணுவத்தால்பிடித்துச் செல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் 40வயதுக்கு,மேற்பட்டோராவர்.

## திருமலையில் 35 குடும்பம் உதவி எதுவுமின்றி தவிப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் கிரியாய் பகுதியில் வாழும் 35 தமிழ்க் குடும்பங்கள் எவ்வித உதவியுமின்றி தவிக்கின்றனர் மூதூர் பிரதேசத்தில் தீவிர இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த 35 தமிழ்க் குடும்பங்கள் காட்டையண்டிய பகுதிகளில் தற்காலிக கொட்டில்களை அமைத்து தங்கியுள்ளனர்.

எவ்வித நிவாரணங்களும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. எவ்வித கவனிப்புகளும் இன்மையால் அந்த மக்கள் உணவும் மருத்துவ வசதியுமின்றி மிகுந்த துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

சிறிலங்கா அரச அதிகாரிகளிடம் இவர்கள் நிவாரணம் கோரியபோது உதவி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

## புலிகளைத் தடை செய்ய சுதந்திரக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்யுமாறு சுதந்திரக் கட்சியின் மத்திய குழு சிறிலங்கா அரசை கோரியுள்ளது.

அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கூடிய சுதந்திரக்கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:

எதிர்க்கட்சித் தலைவர்கள் பின்வரும் விடயங்களைப் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் படி அரசைக் கோரியதாக சுதந்திரக்கட்சி மத்தியகுழு அதன் அறிக்கையில் கூறுகின்றது.

1989 பொதுத்தேர்தலில் மோசடிகளும், ஊழல்களும் இடம்பெற்றதாகக் கூறும்தேர்தல் ஆணையாளரின் அறிக்கை

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டதாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல சத்தியக்கடதாசி மூலம் தெரியப்படுத்தியவை.

மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராகக் கணக்காளர் நாயகம் கட்டுப்பாடுகள் விதித்தமை தொடர்பாகப் பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கை.

அரசு மேற்கூறிய விஷயங்கள் ஒன்றினையாவது பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு (6 ஆம் பக்கம் பார்க்க)

## குடந்தையில் குண்டு வெடிப்பு

## கும்பகோணத்தில் குண்டு வெடிப்பு தூரதர்ஷன் அலுவலகம் சேதம்

(சென்னை)

கும்பகோணத்தில் இருக்கும் அகில இந்தியதொலைக்காட்சி நிறுவனத்தின்பிராந்திய அலுவலகம் ஒன்றில் நேற்றுக் காலை குண்டு வெடிப்பு ஏற்பட்டது.

இச் சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை, எனினும் சம்பவம் நடந்த இடத்தில் 'தனு'வின் புகைப்படத்துடன் கூடிய சுவரொட்டி யொன்றும் கண்டெடுக்கப்பட்டதாக தமிழகப் பொலிசார் கூறியுள்ளனர்.

நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குச் சற்றுப் பின்னர் நடந்த இக் குண்டு வெடிப்பினால் இரண்டு குளிர் சாதனப் பெட்டிகள், ஒரு தொலைக்காட்சிப் பெட்டியும், மின் விளக்குகள் சிலவும் சேதம் அடைந்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் அலுவலகமும் சிறிது சேதமடைந்துள்ளது.

இச் சம்பவத்தில் நாட்டு வெடிகுண்டுகளேபயன்படுத்தப் பட்டிருப்பதாகவும்குண்டுவெடித்த இடத்தில் திரியொன்று காணப்பட்டதாகவும்அந்தஇடத்திற்குநேரில் சென்று விசாரணைநடத்தியதிருச்சிராப்பள்ளிகாவல் துறை ஆணையாளர் காசிம் கூறியுள்ளார்,

சம்பவம் நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சுவரொட்டியில் ''மத்திய அரசு விடுதலைப் புலிகள் மீதான தடையுத்தரவை நீக்க வேண்டும்'' ''தனித் தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்'' என் ( 6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஒப்படைக்க சிறிலங்கா அரசை கேட்கும் முயற்சிகள் ஆரம்பம்

[டில்லி]

ராஜீவ்காந்தி கொலையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரனை இந்தியாவிற்கு அனுப்பி வைக்குமாறு சிறிலங்கா அரசாங்கத்தை உத்தியோகபூர்வமாக கேட்டுக் கொள்ள தேவையானமுயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகஇந்தியஉள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் தெரிவித்தார்.

இதற்கென இந்திய வெளிவிவகார அமைச்சுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# தோ. நிர்வாகம் தனியார்மயமாக்கல் மும்முரமாக நடைபெறுகின்றது

## தொழிலாளர் நலன் பேணப்படவில்லை

**- டி. அய்யாத்துரை கவலை**

(கொழும்பு)

தோட்ட நிர்வாகங்களை தனியார் மயப்படுத்தும் வேலையில் அரசு மும்முரமாக ஈடுபட்டு வருகிறது ஆனால் காலங்காலமாக தோட்டத் தொழில்துறை உற்பத்தியில் தங்களை அர்பணித்து உழைத்துவரும் தொழிலாளர்களின் நலன் குறித்து அது இதுவரை எந்த விதமான அக்கறையும் எடுத்ததாகத் தெரியவில்லை என தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் டி. அய்யாத்துரை விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: தோட்டங்களை கைமாற்றும் போது தொழிலாளர்கள் கொடுப்பனவுகள் ஏனைய பிரச்சினைகள் பற்றியெல்லாம் தொழிற்சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடாத்தி ஓர் உடன்பாட்டுடன் கையளிப்பது தான் வழக்கம், ஆனால் அரசாங்கம் தனக்கு சொந்தமான சகல தோட்டங்களையும் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கும் போது நாலரை லட்சம் தோட்டத் தொழிலாளர்களின் கொடுப்பனவு[illegible] கால சேவைக்[illegible] லப்பணம் வழமை[illegible] நடவடிக்கைகள் தொழில் பாதுகாப்பு போன்றவற்றை பற்றி தொழிற்சங்கங்களோடு ஆலோசிக்காமல் தன்னிச்சையாக செயல்பட முனைந்துள்ளது அரசின் இந்த தன்னிச்சையான செயலினால் பெரிதும் பாதிக்கப்பட போபவர்கள் தோட்டத் தொழில் துறையில் உழைக்கும் நாலரை லட்சம் தொழிலாளர்கள்

மேலும் 1972-ம் ஆண்டு சம்பள சீர்திருத்த குழுவினால் சுவீகரிக்கப்பட்ட பின் அத்தோட்ட தொழிலாளர்களின் கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை. இதற்குரிய ஆவணங்கள் இப்போது காணி சீர்திருத்த ஆணைக்குழு காரியாலயத்தில் இல்லாமையால் சட்டப்படி பெறவேண்டிய கொடுப்பனவுகளைக் கூட பெறமுடியாத நிலையில் தொழிலாளர் உள்ளனர்.

ஆகவே தொழிலாளர்களுக்கு சட்டப்படி பெறவேண்டி சேவைக்காலப்பணம், லீவு, சம்பளம், பிரசவப்பணம், ஊழியர் சேமலாபநிதி போன்றவற்றைப் பெறமுடியாமல் தொழிற்சங்கங்கள் - தொழிற்திணைக்களத்தோடும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவோடும் போராடிக் கொண்டிருக்கிறோம் இது பெரும் வேதனையான செயல் என்றும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினையைத்தீர்க்க நேர்மையாகவிரும்புகிறோம்

**- ரிச்சர்ட் பத்திரண**

(கொழும்பு)

இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென சுதந்திரக்கட்சி நேர்மையாக விரும்புகிறது எனவே சிறுபான்மை பிரதிநிதிகளுடன் பேசி தீர்வு ஒன்றைக்காண அது விரும்புகிறது என சுதந்திரக்கட்சி பிரதம கொறடா ரிச்சர்ட் பத்திரண கடந்த வியாழன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பியே எமது எம்.பி ஒருவரை அதற்கு தலைமை தாங்கச் செய்தோம் ஆனால் அரசுக்கு பிரச்சினையைத் தீர்க்க விருப்பமில்லை அது சபாரத்தினம் என்பவரை பிடித்துக் வைத்துக்கொண்டு சு.க. அங்கத்தவரான அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என பிரசாரம் செய்து சுதந்திரக்கட்சிக்கும் புலிகளுக்கும் இடையில் முடிச்சுப் போடப்பார்த்தது

எமது பேச்சுரிமை ஜனநாயக உரிமை ஆகியவற்றையும் அரசு பறிக்கிறது எனவே அரசுடன் ஒத்துழைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த சிக்கல் தீரும் வரை தெரிவுக்குழுவில் பங்குபற்றப் போவதில்லை எனத் தீர்மானித்துள்ளோம் எனவும் தெரிவித்தார்.

# புலிகளின் தாக்குதலால் தொப்பிகலராணுவ் வாபஸ்

விடுதலைப் புலிகளின் திடீர்த்தாக்குதல்களை சமாளிக்க முடியாமையாலேயே தொப்பிகல இராணுவத்தினர் அம்முகாமை கைவிட்டு அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இம் முகாம் பற்றி விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்ததாவது;

தொப்பிகல காட்டை அண்டியதாக அமைந்திருந்த இந்த இராணுவ முகாமின் காவலரண்கள் அண்மைக்காலமாக விடுதலைப் புலிகளின் தீவிர தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வந்துள்ளன.

கடந்த பெப்ரவரியில் மூன்று தடவைகளும் மார்ச் மாதத்தில் இரண்டு தடவைகளுமாக மொத்தம் ஐந்து தடவைகள் இவ் இராணுவ முகாம் மீது எம்மால் மேற்கொள்ளப்பட்ட பலத்த தாக்குதல் காரணமாக அங்கிருந்த சுமார் 40 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர்

கடந்த பெப்ரவரியில் தொப்பிகல காட்டுப்பகுதியில் படையினர் ஒருவாரகாலம் நடாத்திய தேடுதல் நடவடிக்கையின் போதும் புலிகள் இவர்கள் மீது நடத்திய திடீர் தாக்குதலினால் படையினர் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

தொப்பிகல முகாமுக்கு உதவியாக அருகில் வேறு படை முகாம் இல்லாத காரணங்களினால் அவர்களுக்கு உதவிகள் கிடைப்பது முடியாததாகவே இருந்தது.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சிய தொப்பிகல இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறி தொலைவிலுள்ள வெபர் அரங்கு முகாமுக்குச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொப்பிகல இராணுவ முகாமை கைவிட்டதற்கு நுளம்புத்தொல்லை மலேரியா நோய் என்பனவே காரணம் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தமை தெரிந்ததே.

# மீண்டும் நாசவேலைகள் தென்பகுதியில் ஏற்படலாம்

**- வின்சன்ட் பெரேரா**

(கொழும்பு)

தென்பகுதியில் நாசவேலைகளை மீண்டும் மேற்கொள்வதற்கு நாசகாரர்கள் திட்டமிட்டுள்ளதாக கடந்த வியாழன் பாராளுமன்றத்தில் அமைச்சர் வின்சன்ட்பெரேரா தெரிவித்துள்ளார்.

இவர்கள் தங்களது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆயுதங்களை சேகரித்து வருவதாகவும் புலன் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் ராகமை, டேலிய கொடை, பாணந்துறை, கொஹுவல. ஜாஎல ஆகிய பகுதிகளில் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் நாசகாரரின் திட்டத்தை அம்பலப்படுத்துவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தென்பகுதி நாசகாரர்கள் தேசிய பாதுகாப்புக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலாக இருந்துவருகின்றனர்.

கடந்த ஏப்ரல் 15 ஆம்திகதி முதல் இம் மாதம் 14 ஆம் திகதி வரையிலான ஒரு மாத காலத்தில் நாட்டில் 157பேர் உயிரிழந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## மெய்வல்லுனர் போட்டி

மட்டுவில் கொத்தணி இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை (26.5 92) செவ்வாய் 2 00 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. ஆ. பொ. செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. சிவகுருநாதன் கலந்து கொள்கிறார் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை திருமதி விமலாதேவி சிவகுருநாதன் அவர்கள் வழங்க உள்ளார்.

## பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

விநாயகபுரம் துணுக்காயைச் சேர்ந்த பராசசிங்கம். மோகனதாஸ் (652132146v) சண்டிலிப்பாயைச் சேர்ந்த சேதாரணம் புஸ்பநேசன் (691002963v) கோண்டாவிலைச் சேர்ந்த நகுலேஸ்வரி சுப்பிரமணியம் (316050743v) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசம்பாள் கந்தசாமி (365460302v) சண்டிலிப்பாயைச் சேர்ந்த தம்புநல்லம்மா (246780099v) நெடுந்தீவைச் சேர்ந்த சபாரத்தினம் வேலுப்பிள்ளை ஆகியோரது அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் எமது காரியாலயத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## அர்ச்சயா ஆண்டு விழா

உள்ளூர் உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் செயற்பட்டு வரும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அர்ச்சயா பழத் தொழிற்சாலை தனது இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவை 20-05-92 புதன் கிழமை கோப்பாயில் உள்ள அர்ச்சயா தொழிலகத்தில் கொண்டாடியது

முற்று முழுதாக உள்ளூரில் உற்பத்தியாகும் பழங்களில் இருந்தே அர்ச்சயா மென்பானம தயாரிக்கப்பட்டு வருவதும், இதன் மூலம் உள்ளூர் பழச் செய்கையாளர் ஊக்குவிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**தெரிவுக்குழு பகிஷ்கரிப்பு**

# எதிர்க்கட்சிகளின் செயலை பொறுத்து அடுத்த முடிவு?

**- விஜயபால மெண்டிஸ்**

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவின் கூட்டங்களை எதிர்க்கட்சியினர் தொடர்ந்து பகிஷ்கரிக்கப் போகிறார்களா இல்லையா என்பதை பொறுத்திருந்து பார்த்தே அடுத்த கட்ட நடவடிக்கையை சிந்திக்க வேண்டியுள்ளது.

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரான விஜயபால மெண்டிஸ் கடந்த வியாழன் பத்திரிகையாளரைச் சந்தித்த போது தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்துக்கு இந்தியா விதித்துள்ள தடை மற்றும் பிரபாகரன் விவகாரம் சம்பந்தமாக பத்திரிகையாளர் தொடர்ச்சியாக கேள்விகள் எழுப்பிய போது அமைச்சர் நேரடியாக பதிலளிக்க மறுத்துவிட்டார் எனினும் பிரதமர் இது தொடர்பாக அறிக்கை விடுவார் என்று பதிலளித்தார்.

மேலும் மத்தியவங்கி ஆளுநர் விவகாரம் கணக்காய்வாளரின் அறிக்கை ஆகியவற்றை பாராளுமன்றத்தி விவாதிக்க அரசு மறுப்பது தொடர்பாக பத்திரிகையாளர் கேட்ட போது மத்திய வங்கி ஆளுநர், கணக்காய்வாளர் ஆகியோரின் செயற்பாடுகளை பாராளுமன்றத்தில் விவதிப்பது நல்லதல்ல அவர்களால் விவாதத்துக்கு பதிலளிக்க முடியாது அதற்காகவே விவாதத்தை விரும்பவில்லை. ஆனால் ஆலோசனைக் குழு கூட்டத்தில் இவற்றை ஆராயலாம் அங்கு கேள்வி எழுப்பி பதிலையும் பெறமுடியும் எனத் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு வாவியில் இனந்தெரியாத 3சடலங்கள்?

(கொழும்பு)

மட்டக்களப்பு வாவியில் மூன்று இனந்தெரியாத சடலங்கள் கரையொதுங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கல்லடி பாலத்திற்கு அருகில் கடந்த புதனன்று மேற்படி சடலங்கள் கரையொதுங்கியுள்ளன சடலங்கள் ஒவ்வொன்றும் சாக்குகளில் போடப்பட்டு கட்டப்பட்டிருந்தன மர்மமான மேற்படி சடலங்களால் மட்டக்களப்பு தமிழ் மக்கள் மீண்டும் அச்சமடைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இரு சடலங்கள் மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன இச்சடலங்கள் தமிழர்களுடையது என்றே சந்தேகிக்கப்படுகிறது சடலங்களில் தாக்கப்பட்டதற்கான காயங்கள் அதிகம் காணப்படுவதாகவும் இச்சம்பவங்களை அடுத்து அப்பகுதி மக்கள் மீண்டும் கலவரமடைந்த நிலையிலேயே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

## நினைவு கூருகின்றோம்---
## 1992-05-25

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை சாகாமம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

**2-ம் லெப் ரமேஸ்** (சி. லோகநாதன்-அக்கரைப்பற்று அம்பாறை)

திருக்கோணமலை - தம்பலகமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **சுரேஸ் / சுந்தர்** (திருநாமம் மகாலிங்கம் - முள்ளி பொத்தானை, திருக்கோணமலை)

1988 ஆம் ஆண்டு ஏமாலையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய - கோண்டாவில் பிரதேசப் பொறுப்பாளர் -

**அப்பன்** (கனகரட்ணம் பிரபாகரன் - பிரபாகரன் வீதி, நெட்டிலைப்பாய், கோண்டாவில்)

பருத்தித்துறையில் இந்தியபடையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ஒஸ்ரின்** (கணேசன் இளங்கோவன்-பருத்தித்துறை)

1989 ஆம் ஆண்டு செம்பிமலையில், இந்தியப்படையினருடனான நேரடிமோதலில் வீரச்சாவெய்திய -

**2 - ம் லெப். றெஜினோல்ட்** (கிருஸ்ணன் வசிகரன் - திருக்கோணமலை.)

மாவிட்டபுரத்தில், தேசவிரோத சக்திகளினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர் -

**பாலு** (சபாபதி பாலசிங்கம்)

1990 ஆம் ஆண்டு அம்பாறை. காரைதீவுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த

**சுந்தர் / சந்தர்** (அசமட்லெப்பை செய்லால்தீன் - பள்ளிவாசல் வீதி, வேப்பாளைச்சேனை)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4453)

# மத்திய ஆசியாவில் புதிய முகாம் அமைக்க முஸ்லிம் நாடுகள் முயற்சி

ஈ.சி.ஓ. என அழைக்கப்படும் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் 27 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டதொன்றாகும். ஈரான், பாகிஸ்தான், துருக்கி ஆகியவை இந்நிறுவனத்தில் அடங்கும் கைத்தொழில் மய நாடுகளினால் அமைக்கப்பட்ட பொருளாதார அமைப்புக்களைப்போன்றதாக இது இருந்தாலும் இது அவ்வாறானதல்ல. அது முற்றிலும் வித்தியாசமான ஒரு அமைப்பாகும்.

இந்த அமைப்பை உருவாக்கிய பொழுது கொண்டிருந்த பார்வைக்கும் முற்றிலும் மாறான ஒரு பார்வையே இம்மூன்று நாடுகளும் இப்பொழுது கொண்டுள்ளன. கடந்த பல ஆண்டுகளில் இது தனது முதலாவது கூட்டத்தை அண்மையில் தெஹ்ரானில் நடத்தியது. அப்பொழுது ஐந்து புதிய அங்கத்துவநாடுகள் அனுமதிக்கப்பட்டன. முன்னைய சோவியத் யூனியனின் முஸ்லிம் அங்கத்துவ நாடுகளான அஸர்பைஜான், கஸகஸ்தான், தஜிகிஸ்தான், துருக்மேனியா, உஸ்பெகிஸ்தான் ஆகியவையே அவை.

இன்றைய சூழ்நிலைகளில் இந்த பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனம் பெயரில் மட்டுமே பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. மத்திய ஆசியாவில் சக்திவாய்ந்த புதியமுஸ்லிம் முகாமொன்றை உருவாக்குவதே அதன் நோக்கம் என்பது தெளிவு. காலக்கிரமத்தில் ஆப்கானிஸ்தானும் பெரும்பாலும் அதன் ஒரு அங்கத்துவ நாடாகலாம்.

இயற்கை மூலவளங்களையும் மதப்பற்றுதலையும் கொண்ட ஈரான் இப்பிராந்தியத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்க நிச்சயமாக முயற்சிக்கலாம். தனது சக மதவாத பங்காளிகளை பழமை வாதத்தின் பக்கம் திரும்பச் செய்ய செல்வாக்கைப்பிரயோகிப்பது அதன் குறிக்கோள்களில் ஒன்றாகும்.

இப்பிராந்தியத்தில் தனக்கு நேசநாடுகள்மிகக்குறைவு என்ற மனக்குறை பாகிஸ்தானுக்கு உண்டு. இந்தியாவின் தாக்குதல் ஒன்று ஏற்படுமேயானால் தந்திரோபாயங்களை மேற்கொள்ள தனக்குப் போதிய வாய்ப்பில்லை என பாகிஸ்தான் குறிப்பாக அதன் இராணுவம் பல ஆண்டுளாக முறையிட்டு வந்துள்ளது. இப்பிராந்தியத்தில் தனக்கு நெருங்கிய நேசநாடு குறைவு என்பதே இதன் பொருளாகும்.

இந்த ஏற்பாட்டில் துருக்கி பின் நிலை மிகவும் சீரற்றதாகும். ஐரோப்பாவைச் சேர்ந்திருப்பதா அல்லது மத்திய ஆசியாவைச் சேர்ந்திருப்பதா என்ற இரண்டில் ஒன்றைத் தாங்கள் தெரிவுசெய்யவேண்டி இருப்பதாக நம்பும் இன்றைய துருக்கி தலைவர்களால் இது மேலும் தெளிவாகியுள்ளது.

கிட்டிய எதிர்காலத்தில் ஐரோப்பிய சமூகத்தில் அனுமதிக்கப்படும் வாய்ப்பு துருக்கிக்கு இல்லை என்பது தெளிவு. துருக்கி வேறு வழிகளை நாடுவதற்கான வாய்ப்பை சோவியத் யூனியனின் பிளவு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்த நாடுகளுக்கு பெருந்தொகையிலான அமெரிக்க உதவிக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. ஈ.சி.ஓ. நிறுவனத்தில்துருக்கி சம்பந்தப்படுவதானது துருக்கியரை மத பழமை வாதத்தில்உழலச்செய்வதைக் காட்டிலும் நீதியான கொள்கைகளின் பால் ஈரானைத் திரும்பச் செய்யும் ஆக்கத்தை கொண்டிருக்கும் என அமெரிக்கா நம்புகிறது.

இந்தப் புதிய நிலைமை குறித்து அரேபியாவும், வளைகுடா நாடுகளும் அச்சத்துடனான தவிப்புக்கு உள்ளாகலாம். பல ஆண்டுகளாகத் தங்கள் கருத்துக்கு ஈரான் குறிவைத்திருப்பதனை அந்நாடுகள் நன்குணரும்.

அரபுக் குடாவிலுள்ள நாடுகள் தமது கூட்டுப் பாதுகாப்புக்காக மேற்கு நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளன. ஆனால், அந்நாடுகளில் உள்நாட்டுப் பிரச்சினைகள் உள்ளன என்பது இப்பொழுது பகிரங்கமாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஜனநாயக சீர்திருத்தத்திற்கு அவசரத் தேவை இருப்பதோடு அப்பிராந்தியத்திலுள்ள சீர்திருத்தச் சக்திக[illegible]பில் தலையிட வேண்டும் [illegible]ற வேண்டுகோள்களுக்கு [illegible] முழுதும் காண்பிப்பது மிகவும் கடினமானது என்பதை மேற்கு ஜனநாயக நாடுகள் உணர்ந்துள்ளன.

ஈ.சி.ஓ. நிறுவனத்தின் நீடிப்பினால் ஈராக்கும் நேரடியாகக் கவலை அடைந்துள்ளது. ஈராக்கிற்கு இப்பொழுது இருக்கும் தானே உருவாக்கிக் கொண்ட தொல்லைகள் இல்லாதிருக்குமேயானால் ஈராக்கிற்கு எதிராக மட்டுமல்ல முழுப் பிராந்தியத்திற்கும் எதிராக அமெரிக்கா திட்டமிடுகிறது எனத் தனது அயல் நாடுகளை நம்ப வைக்கும் தனது முயற்சிகளைக் கைவிடுவது பொருத்தம் என்பதை ஈராக் உணரும். ஆனால் அப்பிராந்தியத்தின் அமெரிக்கக் குறிக்கோள்களுக்கு ஏற்ப தன்னைச் சுற்றிவளைக்கும் ஒரு முயற்சியே ஈ.சி.ஓ. என ஈராக் இப்பொழுது கூறுகிறது. போராடிக் கொண்டிருக்கும் சதாமின் ஆட்சிக்கு மிகப் பெரும் உள்நாட்டுப் பயமுறுத்தலாக அமைந்துள்ள ஈராக்கிய ஷிஹிட்டிகள் தொடர்பான ஈரானின் செல்வாக்கிற்குப் புதிய கூட்டு முக்கிய பங்களிக்கலாம் என்பது குறித்தும் ஈராக் கவலை அடைகிறது.

சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்ப்பதும் பயனுள்ளதாகும். ரஷ்ய சாம்ராஜ்யத்தினால் வெற்றி கொள்ளப்படுவதற்கு முன்னர் மத்திய ஆசியா எப்பொழுதும் சிறு நாடுகளைக் கொண்ட நிலையற்ற எல்லைக் கோட்டைக் கொண்டிருந்தது. காலத்துக்கு காலம் தற்காலிகமாக தலைமையைக் கைப்பற்றும் தலைவர்களினால் அந் நாடுகளின் எல்லைகள் அடிக்கடி மாறிக் கொண்டிருக்கும் ஆனால் எப்பொழுதும் பாரசீகமே முக்கிய சக்தியாக இருக்கும்.

நன்றி: இன்டர்போல் பிறஸ்

### நாற்பது வருடங்களுக்கு முந்திய

## உக்ரைனுடனான ஒப்பந்தம் செல்லுபடியற்றது

### - ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்கோ)

கருங்கடல் பகுதியில் இருக்கும் கிரேமியா பகுதியையும் ஏனையவற்றையும் உக்ரைன் குடியரசின் ஆளுமைக்கு மாற்றிய நாற்பது வருடத்திற்கு முந்திய ஒப்பந்தம் செல்லுபடியற்றது என்று ரஷ்யா கூறியுள்ளது.

இது பற்றி அறிவித்த ரஷ்யாவின் உதவி அதிபர் இந்த ஒப்பந்தம் அரசியலமைப்புக்கு முரணானது எனவும், செல்லுபடியற்றது எனவும் தெரிவித்தார்.

கிறேமியா குடாப்பகுதியும், கருங்கடலில் நிலை கொண்டிருக்கும் படைத் தொகுதியும் பற்றிய சர்ச்சைகள் ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே அதிகரித்து வருவது தெரிந்ததே.

### பொஸ்னியா - கர்சகோவியாவிலிருந்து

## இராணுவத்தை வெளியேற்ற பாகிஸ்தான் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

பொஸ்னியா - கர்சகோவியாவில்முஸ்லிம்களுக்குசகிக்க முடியாத நிலையொன்று தோன்றியுள்ளதால்அங்கிருந்து யூகோஸ்லாவியத் துருப்புகளை வெளியேற வேண்டுமென பாகிஸ்தான் கேட்டுள்ளது.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சுக்கு அங்குள்ள யூகோஸ்லாவிய தூதுவர் வரவழைக்கப்பட்டு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் பொதுவாக பொஸ்னியா - கர்சகோவியா வாழ் முஸ்லிம்கள் மீது அக்கறை கொண்டுள்ளது. என பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் பொதுச் செயலாளர் அக்ரம்ஸகி யூகோஸ்லாவிய தூதுவர் ரடொஸ் லெவ்புலாஜிக்கிடம் தெரிவித்தார்

யூகோ படைகள் வெளியேறுவதோடு அப்பகுதியில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு முஸ்லிம்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென அக்ரம்ஸகி அறிவித்துள்ளார்.

## ஐ. நா. வின் நிதி நிலைமை முற்றாக வற்றும் அபாயம்

(வாஷிங்டன்)

ஐ நா. வுக்கு நிதி வழங்கும் நாடுகள் அதைச் செலுத்தாவிட்டால் இம்மாத முடிவில் நிதி நிலைமை முற்றாக வற்றிவிடுமென்று ஐ. நா. சபை தெரிவிக்கின்றது.

மிகப் பெரிய நிலுவை அமெரிக்காவே செலுத்த வேண்டும். கடந்த கால நிலுவையையும், இந்த ஆண்டுப் பணத்தையும் சேர்த்து முழுத் தொகையையும் தாம் செலுத்திவிடப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

சோவியத்அமைப்புகலைத்த பின்னர் ரஷ்யக் குடியரசுகள் நிதியைச் செலுத்தவில்லை. இப்போது ஜேர்மனியும், ஜப்பானும் நிதியைச் செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நிதி பற்றாக்குறை காரணமாகவே உலக நாடுகளில் பிரச்சினை தோன்றும் இடங்களில் போய்த் தலையிட ஐ நா. தயங்குகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## 196 தொன் விமானத்தை இழுத்து சாதனை

[லண்டன் ஹீத்ரோ]

விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த 196 தொன் எடை கொண்ட ஜம்போ ஜெட் விமானமொன்றை ஓடு பாதையில் 3 அங்குலம் இழுத்துச் சாதனை படைத்திருக்கிறார் பிரிட்டனைச் சேர்ந்த டேவ் கோடர் என்பவர்.

மிகப் பெரிய வர்த்தக விமானமான 186 தொன் எடை கொண்ட ஏயார் கனடா விமானத்தையே இவர் இழுத்துச் சென்றார். விமானத்தில் 10 தொன் எண்ணெய் நிரப்பப்பட்டிருந்தது.

விமானத்தை இழுத்துச் சென்ற சற்று நேரத்தில் இவருக்குப் பிராணவாயு ஏற்பட்டது.

இவர் இதற்கு முன்னர் கொன்கோட் விமானம் ஒன்றையும், அமெரிக்க பீ-52 ரக குண்டுவீச்சு விமானம் ஒன்றையும், ஜப்பானிய ரயில் ஒன்றையும் இழுத்துச் சாதனை படைத்துள்ளார்.

## எல்லை மூடப்பட்டது?

[இஸ்லாமாபாத்]

பாகிஸ்தான் அரசு இந்தியாவுடனான சிந்து மாகாணத்தின் எல்லைப்பகுதியை மூடியிருப்பதாக அறிவித்துள்ளது. சமூக விரோத சக்திகளுக்கு எதிராக அந்நாட்டு இராணுவமும், துணை இராணுவப் பிரிவுகளும் பெருமெடுப்பிலான நடவடிக்கை எடுக்க விருப்பதன் முன்னோடியாக இது இருக்கலாம் என்று தெரியவருகிறது.

## பிரான்சு - ஜேர்மன் கூட்டு இராணுவம்

பிரான்சும், ஜேர்மனியும் கூட்டாக ஒரு இராணுவ அமைப்பை நேட்டோ அணியைப் பலப்படுத்து நோக்கில் ஒழுங்கு செய்யவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜேர்மன் அதிபர் கெல்மட்கோலுக்கும் பிரான்சு அதிபர் மித்தரேகனுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும், 35,000 பேரைக் கொண்டதாக இவ் இராணுவ அமைப்பு கூட்டப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### குர்திஷ் மக்கள் மீதான

## சித்திரவதை ஆவணங்கள் அமெரிக்கா போகிறது

(வாஷிங்டன்)

ஆயிரக் கணக்கான குர்திஷ் இன மக்களை சித்திரவதை செய்தமை அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றியமை போன்றவற்றை உறுதிப் படுத்தக் கூடிய தொன் கணக்கான அத்தாட்சிப்பத்திரங்கள் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளன.

வடஈராக்கில் இருந்து இந்த அத்தாட்சிப் பத்திரங்களை அமெரிக்க இராணுவவிமானங்கள் எடுத்துச் செல்ல உள்ளதாக மனித உரிமைகள் இயக்க அதிகாரிகள் இத்தகவலை வெளியிட்டுள்ளனர்.

முப்பது தொன் எடை கொண்ட அத்தாட்சிப் பத்திரங்கள் வட ஈராக்கில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டி இருப்பதாகவும் இன்னும் அமெரிக்க விமானங்கள் வந்து சேரவில்லை என கெனத் ரோத் என்பவர் தெரிவித்துள்ளார்.

குர்திஷ் கெரில்லாக்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் சித்திரவதை செய்த முறை, மற்றும் அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட விதம் என்பனவற்றை விளக்கும் அத்தாட்சிப் பத்திரங்கள் என்பன கைப்பற்றப்பட்ட ஈராக் இரகசியப் பிரிவினரிடம் இருந்து கிடைத்திருப்பதாக கெனத் ரோத் மேலும் தெரிவித்தார்.

## அணு ஆயுதக் குறைப்பிற்கு சீனா ஆதரவளிக்கும்

### - சீனவெளியுறவு அமைச்சு அதிகாரி

(பீகிங்)

பயனுள்ள வகையில் அணு ஆயுத குறைப்பு என்னும் அமைப்புக்கு உட்பட்டு அணு ஆயுத சோதனைகளை முழுமையாகத் தடைசெய்வதைத் தான் ஆதரிப்பதாக சீனா கூறியுள்ளது. இதற்காக சீனா பாடுபடும் என்று சீனாவின் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சீனா நடத்திய நிலத்தரையிலான அணு ஆயுதசோதனை பற்றிய கேள்விக்கு பதிலளித்த அவர், மற்ற நான்கு அணுவாயுத வல்லரசு நாடுகளும் நடத்திய சோதனைகளைக் காட்டிலும் சீனா நடத்திய சோதனை திறனில் குறைந்தது என்று தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவும், முன்னைய சோவியத் யூனியனும் நடத்திய அணு சோதனைகளைக் காட்டிலும் சீனா நடத்திய சோதனை ஆறு மடங்கு வலிமைமிக்கது எனக் கூறியுள்ள அமெரிக்கா சீனா அணு ஆயுத சோதனைகளை நடத்துவதில் நிதானமான போக்கைகடைப்பிடிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

### பிலிப்பைன்ஸ்

## ஜனாதிபதி வேட்பாளா சாகும்வரைஉண்ணாவிரதம்

(மணிலா)

பிலிப்பைன்சில் அதிபர் பதவிக்காக நடந்த தேர்தலில் மோசடிகள் இடம் பெற்றதாகக் கூறி அம் மோசடிகளை அம்பலமாக்கும் நோக்கில் முன்னணியில் இருந்த வேட்பாளர்களில் ஒருவரான திருமதி மரியம் சண்டியாகோ சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் தற்போதைய அதிபர்திருமதி கராசொன் அக்கினோவின் ஆட்சிக்கு தார்மீக ஆதரவு கூட எதுவுமில்லை என்றும் கூறியுள்ளார்.

# வங்கிகள் வர்த்தக மயமாவதால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவர்

## இலாபம் ஈட்டுவதே இலக்கு என்பதால் சேவைநோக்கு திட்டங்கள் கைவிடப்படலாம்

(கொழும்பு)

அரச வங்கிகள் தனியார் மயப்படுத்தப்படுவதன் முதற் கட்டமாக இவை வர்த்தக மயப்படுத்தப்பட இருக்கின்றன. வங்கிகளை சடுதியாக தனியார்மயப்படுத்துவது என்ற அரசின் முடிவுக்கு பல்வேறு தரப்பில் இருந்தும் எதிர்ப்புகள் எழுந்ததையடுத்து அரசு தனது தனியார் மயமாக்கல் என்ற திட்டத்தை படிப்படியாக நடைமுறைப் படுத்த இருக்கிறது இதற்கு வசதியாகவே முதற்கட்ட நடவடிக்கையாக உலக வங்கியின் ஆலோசனையின் அடிப்படையில் வங்கிகளை வர்த்தகமய மாக்கல் என்ற திட்டம் அரசினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனினும் வர்த்தகமயமாக்கல் என்ற திட்டத்திற்கும் பல்வேறு மட்டங்களில் இருந்து எதிர்ப்புக்கள் எழுந்திருப்பதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

மேற்படி திட்டத்தில் வங்கிகளின் நிர்வாக அமைப்பு தன்னிச்சையானதாக இருக்கும், நிர்வாகம் தொடர்பான எந்த முடிவுகளையும் வங்கி நிர்வாகமே எடுக்கும். இதில அரசின் ஆதிக்கம் இருக்காது.

இவ்வாறான நிர்வாக அமைப்பு எப்பொழுதும் வங்கிக்கு கிடைக்கும் லாபத்திலும் வங்கியின் வளர்ச்சியிலுமே அதிக அக்கறை செலுத்துவதாக இருக்கும் இதற்கு வசதியாக மிகவும் நம்பிக்கையான முதலீடுகளில் மட்டுமே வங்கி ஈடுபடும். கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது மீளப்பெறக்கூடிய அல்லது மீளப் பெறுவதற்கு நூறு வீதம் உத்தரவாதம் அளிக்கும் கடன் திட்டங்களை மட்டும் நடைமுறைக்கு கொண்டுவரும்,

நாட்டின் அடிமட்ட மக்களின் பிரதான தொழில் முயற்சிகளை விவசாயம், மீன்பிடி ஆகியவை எப்பொழுதும் நூறு வீதம் நம்பிக்கையான முதலீடுகளாக இருக்க முடியாது என்பதால் இவ்வாறான தொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கக் கூடிய கடன் திட்டங்களை இவ்வங்கி நிர்வாகம் அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. சுமார் 95 சதவீதம் கடன்களை மீளப்பெற்றுக்கொண்டுவிடவேண்டும் என்பதே இந்த வங்கி நிர்வாகத்தின் தற்போதைய இலக்காக உள்ளது.

மேற்படி நடைமுறைகளால் சாதாரண மக்கள் வங்கியின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும். வசதிபடைத்தவர்களேமேலும் முன்னேறுவதற்கு இந்த நடைமுறை வழிவகுக்கும். இதனால் வங்கியின் சேவை கிராம மட்டத்திற்குச் செல்வதற்கு சந்தர்ப்பம் இல்லை. இதனால் கிராமப் புறங்களில் தற்போது இருக்கும் வங்கிக்கிளைகள் மூடப்படலாம். இதன் மூலம் இங்கு கடமையாற்றிய ஊழியர்கள் இடைநிறுத்தப்படலாம் அல்லது வேறு இடத்துக்கு மாற்றப்படலாம் உலக வங்கியின் மற்றுமொரு ஆலோசனையான "ஆட்குறைப்பு" இதன் மூலம் சாத்தியமாகும் சந்தர்ப்பம் உண்டு. அத்துடன் வங்கிகளின் தேசியரீதியிலான செயற்பாடுகள் தடைப்படும். இதனால் சாதாரண மக்களுக்கும் வங்கிக்கும் இடையிலான நெருக்கம் குறைவடையும். இவற்றைவிட அரசின் அபிவிருத்தித்திட்டங்கள் சார்ந்த அல்லது நிவாரணபுனர்வாழ்வு நடவடிக்கைகள் சார்ந்த திட்டங்களை தன்னிச்சையான நிர்வாகமாக இயங்கும் வங்கியினூடாக நடைமுறைப் படுத்த முடியும் என்று கூற முடியாது. இந்தநிலையில் இவ்வாறான திட்டங்களை அரசு கைவிடவேண்டும் அல்லது வேறு ஒரு நிர்வாக அமைப்பின் மூலம் நடைமுறைப் படுத்த வேண்டியிருக்கும். அதேபோலவே அரசு வழங்க முன்வரும் கடன் திட்டங்கள் மற்றும் மானிய உதவித் திட்டங்களையும் நடைமுறைப் படுத்துவதில் சிரமங்கள் தோன்றும் என்று பொருளியல் வல்லுனர்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

(க)

## வினாத்தாளிலுள்ள தவறு சுட்டிக்காட்டப்பட்டன

(நமது நிருபர்)

அண்மையில் நடைபெற்ற க.பொ.த உயர்தரவிசேடபரீட்சை வினாத்தாள்கள்பாடத்திட்டங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்படவில்லை எனவும் அவ்வாறு தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களில் இடம் பெற்ற வினாக்களில் பல தவறுகள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

கடந்தவாரம் கொழும்பு சென்ற யாழ் அரசாங்க அதிபர் திரு கா.மாணிக்கவாசகர் முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு இரா.சுந்தரலிங்கம் ஆகியோர் கடந்த புதன் கிழமை அங்கு பரீட்சை ஆணையாளர் திரு ஆதர் வெதமுல்லையைச் சந்தித்து நேரடியாக ஆட்சேபனை தெரிவித்துள்ளனர். மேற்படி பரீட்சை வினாத்தாள்களில் இடம் பெற்ற தவறுகளை ஈழநாதம்பத்திரிகை ஏற்கனவே சுட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. [ச]

## ஆதாரம் இதழ் வாசகர்களுக்கு 50 பெறுமதி வாய்ந்த பரிசுகள்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழான ஆதாரம் வாசகர்களுக்கிடையில் கருத்துக் கணிப்பீட்டுப் போட்டி ஒன்று நடத்தப்படுகின்றது. இப்போட்டியில் தெர்வு செய்யப்படும் 50 வாசகர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப் படவுள்ளன. இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவமும் மேலதிக விபரங்களும் ஆதாரம் 7-ம் இதழில் வெளியிடப் பட்டுள்ளது.

## முன்னாள் இராணுவத்தை தேடி பொலிசார் வேட்டை

(மாத்தளை)

மாத்தளைப் பிரதேசத்தில் இரவு பகல் நேரங்களில் வீடுகளில் கொள்ளையடித்து வரும் முன்னாள் இராணுவ வீரர் இருவரை மாத்தளை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இவர்கள் உடுபிஹில்ல, கந்தேகெதர, தொடற்தெனிய ஆகிய பகுதிகளிலுள்ள சுமார் 15 வீடுகளில் தங்க நகைகள், ரேடியோ, கசெட், தொலைக் காட்சிப் பெட்டி உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியுள்ள பொருள்களை சூறையாடியுள்ளனர்.

இவர்கள் மாத்தளை நகருக்கு அண்மையில் உள்ள வட்டகொட காட்டில் ஒளித்திருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து மாத்தளை பொலிஸார் அண்மையில் இவர்களைத் தேட இரவு எட்டு மணிக்கு காட்டில ஒளித்திருந்தபோது இவர்களுக்கு உணவு கொண்டுசென்ற இவர்களின் தாயாரை கைது செய்துள்ளனர். தாய் சத்தமிடவே இருவரும் தப்பியோடிவிட்டனர் என மாத்தளை பொலிசார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப் பட்ட தாய் மாத்தளை பொலிஸில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## யாழ்.மாவட்ட வங்கிகளுக்கு கப்பல் மூலம் பணம்

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்தில் இயங்கும் வங்கிகளுக்குத் தேவையான பணத்தை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான நடவடிக்கையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

கடந்த பல மாதங்களாக வங்கிகளுக்கு கப்பல் மூலம் பணம் அனுப்பத் தடைவிதிக்கப்பட்டிருந்தது இதனால் ஏற்பட்டுள்ள சிரமங்களை நீக்கும் பொருட்டே மீண்டும் கப்பல் மூலம் எடுத்துவர சம்பந்தப் பட்ட அதிகாரிகளுடன் அரச அதிபர் நடவடிக்கைகளை எடுத்துள்ளார். (ச)

## சிறுபோக செய்கை பாதிப்பு

இரணைமடுக் குளத்தில் நீரின்மையால் இப்பகுதியில் சிறுபோக பயிர்ச்செய்கை கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது இருந்தும், பிரபந்தனாறு, கனகாம்பிகைக் குளம், கல்மடுநகர், புதுமுறிப்பு ஆகிய குளங்களின் கீழ் 325 ஏக்கரில் உபதானியப் பயிர்ச்செய்கையும், 348 ஏக்கரில் நெற் செய்கையும் மேற் கொள்வதற்கான ஒழுங்குகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பொலிசார் எச்சரிக்கை

(கொழும்பு)

வீடுகளில் அதிக அளவில் நகைகளை வைத்திருக்கவேண்டாமெனச் சிறிலங்காப் பொலிசார் பொதுமக்களை எச்சரித்துள்ளனர். மேலும் கூறுகையில் வீடுகளில் நகைகளை குறைவாக வைத்திருங்கள் அல்லது இமிரேசன் நகைகளை வைத்திருங்கள் எனவும் வங்கி லாக்கர்களைப் பொது மக்கள் பயன்படுத்தலாமெனவும் நுகேகொடை பிரிவு பொலிஸ் சுப்பிரின்டன் ஆலோசனை கூறியுள்ளார்.

## கால்நடைகளுக்கு தடுப்பூசி

கால்நடைகளில் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் முயற்சியாகக் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடும் வேலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது 754 மாடுகளுக்கு எவ்.எம்.டி. [F. M D.] கால் வாய் நோய்த் தடுப்பு மருந்தும், 302 மாடுகளுக்கு எச்.எஸ். [H. S.] தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்தும் ஏற்றப்பட்டுள்ளது. 2,657 கோழிகளுக்கு ரனிக்கட்நோய் மருந்தும் ஏற்றப்பட்டுள்ளதாகவும், இதனால் கால்நடைகளிடையே நோய் பரவுவதை ஓரளவே கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடிந்துள்ளது எனவும், போதியளவு கால்நடை மருந்துகள் கொண்டு வரப்படாமையினால் வழமையான நோய்த் தடுப்பு வேலைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இத்தகைய நடத்தை முறைகேடானது எனவும், வெட்கப்படத்தக்கது எனவும் பிரதிச் சபை முதல்வர் விஜேபால மெண்டிஸ் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டினார்.

## சேவைக்கட்டணம் அறவிடப்படும்

மே முதல் திகதியிலிருந்து வைப்புப் பணத்தில் மாதத்தில் எந்தநாளிலாவது 1500 ரூபாவுக்குக் குறைவாக இருந்தால் 10 ரூபா வாடிக்கையாளர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக அறவிடப்படுமென்று இலங்கை வங்கி அறிவித்துள்ளது.

## இராமசேவையாளர் பதவி போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கிராமசேவையாளர் பதவிக்கான போட்டிப்பரீட்சை அடுத்த மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் பதினெட்டு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

ஆயினும் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் இதுவரை இங்கு வந்து சேரவில்லை பரீட்சார்த்திகளின் வசதிகருதி அவர்களது இருப்பிடங்களுக்கு அண்மையிலேயே பரீட்சை மண்டபங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (ச)

## சித்திரக் கருத்தரங்கு

(குருநகர்)

"ஓவியத்தில் ஒருங்கமைப்பு" என்னும் சித்திரக் கருத்தரங்கு ஒன்றை யாழ். திருமறைக்கலா மன்றம் 25 ஆம் திகதி மாலை 5 மணிக்கு மன்றக் கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

ஓய்வுபெற்ற சித்திரப் பணிப்பாளர் திரு. கே. இராஜரெட்ணம் கருத்துரை நிகழ்த்துவார். (51)

## ராஜீவ் கொலை விசாரணை அதிகாரி கொழும்பு வருகை

இந்தியாவில் தடைசெய்யப்பட்டபின்னர் ராஜீவ் கொலை பற்றி விசாரணை நடாத்தி வரும் அதிகாரிகளின் குழுவொன்று கொழும்பிற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது பற்றிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காகவே இக்குழு கொழும்பிற்கு விஜயம் செய்துள்ளதாக தெரிகிறது.

ஆனால் நாடுகடத்தும் நடவடிக்கைகள் பற்றி வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளே நடவடிக்கையில் ஈடுபட முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம்

## வித்துக்கள் கொள்வனவு

கவனிப்பாரற்று வீணாகும் எண்ணெய் வித்துக்களைப் பயன்படுத்தி எண்ணெய் எடுக்கும் முயற்சியாக, கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஊடாக வேம்பு, இலுப்பை, ஆமணக்கு வித்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு தமிழீழ ஆய்வு நிறுவனம் திட்டமிட்டுள்ளது

எண்ணெய் வித்துக்களைச் சேகரித்து விற்பனை செய்ய விரும்புவோர் கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

## மலையக மக்கள் முன்னணியினர்

## தொடர்ந்துதடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பது ஏன்?

### -சபையில் சு.க.எம்.பி.

(கொழும்பு)

மலையக மக்கள்முன்னணித் தலைவர் சந்திரசேகரன் நீதிமன்றத்தின் தீர்ப்பிக்கிணங்க விடுதலை செய்யப்படாமல் அவசரகால விதிகளின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப் பட்டுள்ளார். அமைச்சர் தொண்டமானுக்கு அவர் அச்சுறுத்தல் என்பதால் தடுத்து வைத்துள்ளீர்களா என சுதந்திரக்கட்சி எம். பி. திலக் கருணாரட்னா கடந்த வியாழனன்று பாராளுமன்றத்தில் அவசர கால சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் மலைநாட்டுப் பிரதேசங்கள் இன்று தமிழர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. 54 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பை தோட்டத் தொழிலாளருக்கு கொடுக்கப் போகிறீர்கள் பல வருடங்களுக்கு முன் வடகிழக்கில் செய்ததை இப்போது மலைநாட்டில் மேற்கொள்கிறீர்கள். தொண்டமானுக்கு பயந்தே இவற்றை செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

**சிந்தனைக்கு**

நிதானமான ஐயப்பாடு, விவேகிகளின் ஒளிவிளக்கு எனப்படும். - வில்லியம் ஷேக்ஸ்பியர்

**ஈழநாதம்**

61, [illegible], யாழ்ப்பாணம் 25-05-1992
தொலைபேசி
ஆசிரிபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308

# சிங்களக் கட்சிகள் இன்னும் திருந்தவில்லை

இனப்பிரச்சினைக்கு, தீர்வுத்திட்டம் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்காக சிறிலங்கா அரசாங்கம் நியமித்த பாராளுமன்றத் தெரிவுக்குழு செயலிழந்து போகும் அவலநிலையில் உள்ளது. எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்றத் தெரிவுக்குழுவை பகிஷ்கரிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்தே இந்நிலை உருவாகியுள்ளது.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் ஒரு ஏற்புடைய தீர்வுத்திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியுமா என்பது ஒரு கேள்விக்குரியதே. தமிழரின் தாயகப் பகுதியையே ஒரு அலகாக அங்கீகரிக்கும் நிலையைப் பாராளுமன்றத்தெரிவுக்குழு எட்டமுடியாத நிலையில் இக்கேள்வி எழுவது சரியானதே. ஆனால் தற்பொழுது எழுந்துள்ள பிரச்சினை அதுவல்ல. சிங்கள அரசியல் கட்சிகள் இவ்வளவு அழிவுகளின் பின்னரும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து எந்தவொரு சிறு தீர்வுத்திட்டத்தையும், முன்வைக்கத் தயாராக இல்லை என்பதே ஆகும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு, சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி. மங்கள முனசிங்கா கொண்டுவந்த தனிநபர் பிரேரணை ஒன்றின் மூலம் அமைக்கப்பட்டதாகும். பொதுவாகவே எதிர்க்கட்சிகளின் பிரேரணைகளையே கருத்திற்கொள்ளாத ஐக்கிய தேசியகட்சி அரசாங்கம் - சகல சிறிலங்கா அரசாங்கங்களும் அவ்வாறானதே - மங்கள முனசிங்கா கொண்டுவந்த தனிநபர் பிரேரணையை பற்றிப்பிடித்துக் கொண்டு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவையும் அமைத்தது.

இதேவேளை, சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா உறுதி மொழி ஒன்றையும் அளித்தார். பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கும் கருத்தொருமைப்பாடான தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் எதுவிதமாற்றமுமின்றி நிறைவேற்றும் என்பதே அது. இந்த உறுதி மொழியைத் தொடர்ந்தும், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா வற்புறுத்தி வந்தார்.

ஆனாலும், பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியோ, எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ தீர்வுத்திட்டம் எதையும் முன்வைக்கவில்லை இதுகுறித்து விமர்சனம் எழுந்த போது அரசாங்க கட்சியோ, அன்றி எதிர்க்கட்சியோ தீர்வுத்திட்டம் முன்வைக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. வைக்கப்பட்ட தீர்வுத்திட்டங்களைக் கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒரு கருத்தொருமைப்பாடான முடிவை முன்வைத்தால் அதை நிறைவேற்றுவதாக அரசாங்கம் தெரிவித்தது. இதைத்தொடர்ந்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவும் செயற்பட்டு வந்தது. கடந்த 19 ஆம் திகதி இறுதிமுடிவு எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், கடந்த கூட்டத்தை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்ததினால், பாராளுமன்றத்தெரிவுக்குழுவின் கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே தெரிவுக்குழுவின் எதிர்காலம் கேள்விக்குரியதாகியுள்ளது.

சிங்களக் கட்சியினர் யாராக இருப்பினும், அவர்கள் எப்பொழுதும் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு ஒன்றைக் காணத்தயாராக இல்லை, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் - திரு. செல்வநாயகமும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டபோது ஐக்கிய தேசியகட்சி எதிர்த்தது. திரு. டட்லி சேனநாயக்காவும் - திரு செல்வநாயகமும் ஒப்பந்தம் செய்தபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்த்தது. அதாவது இனப்பிரச்சினைத் தீர்விற்கு மாறிமாறி சிங்களக் கட்சிகள் இடைஞ்சலாகவே இருந்து வந்தன. தற்பொழுது பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு சுதந்திரக் கட்சி முட்டுக்கட்டைபோட்டுள்ளது.

"இனப்பிரச்சினைக்கான தீர்வு வேறு விவகாரம், ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சிக்கும் மோதல் ஏற்படக் காரணமாக இருந்த விவகாரம் வேறு. இதனால், சுதந்திரக் கட்சி பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றி ஓர் தீர்வுத் திட்டம உருவாக வழிவகுக்க வேண்டும்" இவ்வாறு கொழும்பிலுள்ள சில குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இவர்களின் இக்கோரிக்கையானது சிறிலங்கா அரசியலின் நிதர்சன நிலையை அறியாததன் வெளிப்பாடாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை சிங்கள அரசியல் கட்சிகளின் அடித்தளமாக இனவாதமே உள்ளது. இனவாதத்தை எவ்வளவு வெளிகாட்டுகின்றார்களோ அவ்வளவிற்கு அரசியலில் முதன்மைபெறுகின்றனர். ஆட்சிபீடமேறுகின்றனர். இந்நிலையில் அவர்களின் அரசியல் அடித்தளத்தையே தகர்த்துவிடும் கோரிக்கையை அவர்களினால் எவ்வாறு நிறைவேற்ற முடியும். ஆனால் இனப்பிரச்சினைக்கு தமிழர் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்காவிடில், அது ஆட்சியின் அடித்தளத்தையே தகர்த்துவிடும் என்பதை அவர்கள் உணரத் தவறியுள்ளனர் இந்நிலை தொடர்ந்தால் இவர்கள் தமது அடித்தளத்தையும் இழந்துவிட வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# இந்திய ராஜதந்திரி மித்தல் பாகிஸ்தானில் கடத்தப்பட்டார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இருக்கும் இந்தியத்தூதுவராலயத்தை சேர்ந்த ராஜதந்திரி ஒருவர் பாகிஸ்தான் புலனாய்வு பிரிவினரால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை தமது இல்லத்தில் இருந்து இந்திய இராஜதந்திரியான ராஜேஷ் மித்தல் தமது காரில் புறப்பட்ட சமயம் வழிமறித்த பாகிஸ்தானிய புலனாய்வு பிரிவினர் அவரைப் பலாத்காரமாகக் கடத்திக் கொண்டு காரில் சென்று மறைந்து விட்டனர் எனத்தெரியவருகின்றது. திரு. ராஜேஷ் மித்தலின் காரையும் அவர்கள் கடத்திச் சென்றனர். இச்சம்பவத்தில் திரு மித்தலின் சந்தையாரும் காயமடைய நேரிட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் இருக்கும் இந்தியத் தூதுவராலயம் இச்சம்பவம் தொடர்பாக பாகிஸ்தான் அரசிடம் கடும் கண்டனத்தை தெரிவித்திருப்பதுடன் திரு. மித்தலின் உடலுக்கும் உயிருக்கும் எந்தத் தீங்கும் இழைக்கப்படாமல் உடனடியாக அவர் விடுவிக்கப்படத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

இஸ்லாமாபாத்தில் இதே போல முன்னரும் இந்திய ராஜதந்திரி ஒருவரின் துணைவியார் கடத்தப்பட்டு சில மணிநேரம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வீரப்பனை கைதுசெய்ய பொலிசார் தீவிர தேடுதல்

(சென்னை)

சந்தனக்கட்டைகள் கடத்துவதில் பிரபல்யம் பெற்றவர் எனக் கூறப்படும் வீரப்பனைக் கைது செய்வதற்காக சேலம், தர்மபுரி மாவட்டங்களிலுள்ள அடர்ந்த காடுகளில் தீவிர தேடுதல் நடத்தப்படுகிறது. இத்தேடுதலில் சிறப்பு ஆயுதப் படைப்பிரிவைச் சேர்ந்த சுமார் இருநூறு காவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தண்டாப் பகுதி, குளத்தூர், கதிரியசப் பட்டிப்பகுதி, காவிரியாற்றுப் பகுதி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என காவல் துறையின் வேலூர் பகுதி உயர் அதிகாரி கூறியுள்ளார்.

# வீரப்பனைக் கைதுசெய்ய உதவுமாறு கோரிக்கை

(சென்னை)

சந்தனக்கட்டை கடத்துவதில் பிரபல்யம்பெற்ற வீரப்பனைக் கைது செய்ய உதவுமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதாவைக் கோரியிருப்பதாக கர்நாடக மாநில தகவல்துறை அமைச்சர் தரம்சிங் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இது தொடர்பாகத் தமிழக முதல்வருக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும், அவரது பதில் கிடைத்தபின்னர் தாம் நேரில் பேசவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன்புதுடில்லியில் தமிழக அரசு அதிகாரிகளுடன் கர்நாடக மாநில அரசு அதிகாரிகள் இது தொடர்பாகப் பேச்சு நடாத்திவருவதாகவும் வீரப்பனைக் கைதுசெய்வதற்கென இரு மாநிலங்களும் இணைந்த தனிப்படைப்பிரிவு ஒன்று அமைக்கப்படும் சாத்தியம் பற்றி ஆராயப்படுவதாகவும் தெரிவித்தார்.

## இதுவரை வெளிவராத

# நேரு கடிதங்கள் வெளியிட சோனியா காந்தி முயற்சி

(லண்டன்)

ராஜீவ் காந்தியின் நினைவு தினத்திற்கு பின் அடுத்த வாரம் அளவில் தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்ட தனது மாமி இந்திரா காந்தியின் குணாதிசயங்கள் பற்றிய புதிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கு உறுதி அளித்துள்ளார் திருமதி சோனியாகாந்தி அவர்கள்.

பிரிட்டிஷ் பத்திரிகையான 'இன்டிபென்டன்ட்'டுக்கு அளித்த பேட்டியொன்றில் 1984 இல் கொலை செய்யப்பட்ட இந்திரா காந்திக்கும் அவரது தந்தை ஜவஹர்லால் நேருவுக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்டதும் பகிரங்கமாகபிரசுரிக்கப்படாததுமான கடிதங்களை தனது மாமியைப் பற்றி புதிய உண்மைகளை உணர்த்தும் என சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

மேலும் எனது மாமி தைரியம் வாய்ந்த ஒரு பெண் நாட்டுக்காகவே வாழ்ந்து உயிர் நீத்தவர் அவர் தனிமையாகவும் எதேச்சதிகாரப் போக்கும் கொண்டு வாழ்ந்தவரெனவே அவரது அரசியல் எதிரிகள் கருதுகின்றனர் 'என் மாமி படுகொலை செய்யப்பட்ட பின் அவர் சேகரித்திருந்த பெருந்தொகையான கடிதங்களை படித்தேன் இவற்றின் மூலம் நேருவுக்கும் இந்திராவுக்கும் இடையேயான குறிப்பிடத்தக்க அளவு கடிதங்கள் இன்றும் வெளிப்படுத்தப்படவில்லை என்பதைக் கண்டேன் எனவே இவற்றை பிரசுரிப்பது நல்ல யோசனையாகப்பட்டது இவை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை எனது மாமியின் குணாதிசயங்களும் உணர்வுகளும் அதில் நிறைய உள்ளன என சோனியாகாந்தி தெரிவித்திருக்கிறார்

ஜவஹர்லால் நேருவுக்கும் இந்திரா காந்திக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களையே அவர் புத்தகமாக பிரசுரிக்க உள்ளார்.

ஆனால் தனது புத்தகம் பற்றிய கேள்விகள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலே இப்பேட்டி அமைந்ததாகவும் கேள்விகளும் பதில்களும் எழுத்தின் மூலமே இருந்ததாகவும் மேற்படி பத்திரிகையைச் சேர்ந்த அலெக்சாண்டர் சான்சலர் தெரிவித்தார்.

## வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின்

# பீகிங் நிருபரின் அலுவலகம் சீன அதிகாரிகள் சோதனை

## வாஷிங்டன் கண்டனம்

(வாஷிங்டன்)

வாஷிங்டன்போஸ்ட் பீய்ஜிங் நிருபரின் அலுவலகத்தைச் சீன பாதுகாப்பு அதிகாரிகள் சோதனையிட்ட சம்பவத்திற்கு அமெரிக்கா ஆட்சேபனை தெரிவித்துள்ளது

சீனாவில் நிகழ்பவைகளை பகிரங்கமாக அறிவிப்பதற்கு பிறநாட்டு நிருபர்களுக்கு தடைகளை உண்டு பண்ணுவதற்கு கவலை தெரிவிக்கிறோம் எனவும் நிருபர்கள் செய்திகளை அறிவிப்பதற்கு தடைகள் இருக்கக் கூடாதெனவும் அமெரிக்க அரசாங்கப் பேச்சாளரான டட்வைலர் தெரிவித்துள்ளார்.

சீனாவிலுள்ள அமெரிக்க, வாஷிங்டன் போஸ்ட் நிருபர் 'லெனாசன்' எனும் பெண் நிருபர் அவரது தகுதிக்கேற்ப நடந்து கொள்ளவில்லை என சீன பாதுகாப்பு அதிகாரிகளால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை பிறநாட்டு ராஜதந்திரிகள் இருக்கும் பகுதிகளிலேயே பிறநாட்டு நிருபர்களும் சீனாவில் தங்கி இருக்க வேண்டும் என்பது நடைமுறையிலுள்ளது சீன நிருபர்கள் பிறநாட்டு நிருபர்களுடன் நெருங்கிப் பழகினாலும் சீன அதிகாரிகள் அவர்களை விசாரிப்பதாகவும் கூறப்படுகிறது.

# இந்தியாவிற்கு காலிதாஸியா

(டாக்கா)

பங்களாதேசப் பிரதமர் திருமதி பேகம் காலிதா ஸியா செவ்வாயன்று இந்தியாவிற்கு விஜயம் ஒன்றைமேற்கொள்ள உள்ளார். இந்த விஜயத்தின் போது இருநாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை மற்றும் நதிநீர்ப் பங்கீடு போன்ற விடயங்கள் பேச்சுவார்த்தையில் இடம்பெறும் என்று பங்களாதேச வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பங்களாதேசப் பிரதமர் திருமதி பேகம் கலிதா ஸியா இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றைமேற்கொள்வது இதுவேமுதல்தடவையாகும்

# மது விற்பனைக்கு அனுமதி

மது விலக்கை அமுல் படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஜூன் முதலாம் திகதியிலிருந்து மேலும் 2000 மதுவிற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்க முடிவு செய்துள்ளது

தமிழ் நாட்டில் இப்பொழுது 3039 மதுபானச் சில்லறை விற்பனை நிலையங்கள் உள்ளன. இந்த எண்ணிக்கை 5000மாக உயர்த்தப்படும். மேலும் மது விற்பனை நிலையங்களில் 'பார்' வைத்திருக்கவும் ஜெயலலிதா அரசு அனுமதி வழங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அருள்மணி விடுதலை

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் சுவரொட்டிகள் ஒட்டியதாகத் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அருள்மணி என்பவர் பிணையில் விடுதலைசெய்யப்பட்டுள்ளார்

இந்த வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம் அருள்மணியை நிபந்தனையுடன் கூடிய பிணையில் விடுதலை செய்துள்ளது.

# அனைத்து போராட்ட நிகழ்வுகள் இலக்கிய வடிவமாக வேண்டும்

\- யோகி

(யாழ்ப்பாணம்)

"வேதனைகளும், சோதனைகளும், நிறைந்த எமது போராட்டத்தின் அனைத்து வரலாற்று நிகழ்வுகளும் இலக்கிய வடிவமாக மாற்றப்பட வேண்டும். இவ்வாறு எமது நீண்ட உறுதிபடைத்த போராட்ட வரலாறுகள் இலக்கியங்களாக உருவாக்கப்பட்டால் அவை தமிழினத்துக்கு மட்டுமல்ல உலகுக்கே வழிகாட்டிகளாக அமையும்" இவ்வாறு நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில நடைபெற்ற "விடியலின் பாடல்கள்" என்றஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்திய திரு. யோகி கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது எமது போராட்டத்தின் நூறுவீத வரலாற்றின் ஒரு சிறு பகுதி மட்டுமே இதுவரை இலக்கிய வடிவங்களாக வெளிவந்திருக்கின்றன. மிகுதி வரலாறுகள் இதுவரை இலக்கிய வடிவம் பெறவில்லை என்றார்.

மேலும் வாங்கி விற்கும் அரசியல் நடாத்தி இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் துரோகம் செய்வதற்கு நாம் தயாராக இல்லை. அடிமையாவதற்கு தலைமையில்லை. எம்மிடம் உறுதிபடைத்த தலைமை உண்டு எனவே நாம் என்றும் உறுதியுடன் நின்று எமது மண்ணின் விடுதலைக்காக போராடுவோம் என்று வெளியிடப்பட்ட ஒலிப்பதிவு நாடாவில் உள்ள பாடல் வரிகளை மேற்கோள்காட்டி உரை நிகழ்த்தினார்.

## சுவீடன் சிறிலங்காவிற்கு உதவி

(கொழும்பு)

சிறிலங்கா விற்கான அபிவிருத்தி உதவியாக இருபத்தாறு கோடியே இருபத்தைந்து லட்சம் ரூபாவை சுவீடன் அரசாங்கம் வழங்கவுள்ளது. 1992 ஆம் 1993-ம் ஆண்டிற்கான உதவிகள் தொடர்பாக சென்ற வாரம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையையடுத்து இந்த உதவி வழங்கப்படுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது இந்த உதவியில் வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் அவசரகால நிவாரண உதவி மற்றும் பனிசாபிமான உதவிகளும் அடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம் இல்லை

யாழ். பல்கலைக்கழக தற்காலிக அமைய ஊழியர்களை ஞர்கள் இதுவரை நிரந்தர மாக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் போட்டிப் பரீட்சை மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட 15க்கும் மேற்பட்ட எழுதுவினைஞர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை பல்கலைக்கழக நிர்வாக பீடம் மேற்கொள்ளவில்லையென மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதம் பல்கலைக்கழக மானியம் ஆணைக்குழுவினால் ஏற்கெனவே அனுப்பப்படும் என்று குறிப்பிடத்தக்கது. (50)

## இறுதிப்போட்டி முடிவுகள்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் அணி வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

நேற்றைய தினம் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பளை கிறாஸ்கொப்பர்ஸ் அணி யாழ்.பல்கலைக்கழக அணியை 37க்கு 29 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இப்போட்டியின் சிறந்த வீராங்கனையாக கிறாஸ்கொப்பர்ஸ் அணியைச் சேர்ந்த செல்வி த சந்திரமதி தெரிவுசெய்யப்பட்டார்.

நேற்று நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான மற்றொரு போட்டியில் சென் அன்ரனிஸ் அணி நவாலி முரசொலி அணியை 37க்கு 10 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

## விடியலின் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

விடியலின் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவும் அந் நாடாவில் அடங்கும் பாடல்களை சிறப்புற ஆக்கிய கலைஞர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது மக்கள் கலந்துகொண்ட இவ் விழாவில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு செல்வராசா, மகளிர் முன்னணி யாழ்.மாவட்ட பெறுப்பாளர் செல்வி ஆர்த்தி ஆகியோர் மங்கல விளக்கை ஏற்றிவைக்க வரவேற்புரையை திரு.சிட்டு நிகழ்த்தினார் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி தலைமை வகித்து நிகழ்ச்சியை ஆரம்பித்து உரை நிகழ்த்தினார்

ஒலிப்பதிவு நாடாவையாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு.தமிழ்ச்செல்வன் வெளியிட அதனை திரு யோகரத்தினம் யோகி அவர்கள் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து இந் நாடாவின் ஆக்கத்திற்கு பங்களிப்புச் செய்த இசைக் கலைஞர்களுக்கான பரிசில்களை திரு தமிழ்ச்செல்வன் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு உரையை விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அவர்களும் திரு.யோகரத்தினம் யோகி யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் செ. வேலாயும் மற்றும் சோ.பத்மநாதன் விடுதலைப்புலிகளின் மகளிர் முன்னணித் தலைவி செல்வி ஜெயா, விடுதலைப் புலிகளின் யாழ். கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. சிட்டு ஆகியோர் நிகழ்த்தினார்கள் இந் நிகழ்வாக தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (பா)

## 'யுக்திய' ஆசிரியருக்கு நீதிமன்றம் வர உத்தரவு

(கொழும்பு)

'யுக்திய' ஆசிரியர் சுனாந்த தேசப்பிரியாவை நீதிமன்றத்தில் ஜூன் 6 ஆம் திகதி ஆஜராகும்படி கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி எவ். என். டி. ஜெயசூரியா கட்டளை பிறப்பித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் ஏணஸ்ட் பெரேராவின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் 12-04-92 இல் முன்னாள் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவால் வெளிப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சத்தியக் கடதாசியைப் பிரசுரித்தது சம்பந்தமாகவே இவர்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது பீனல் சட்டம் 480 ஆம் பிரிவின் கீழ் தேசப்பிரிய மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதிப் போட்டி இன்று யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள இப் போட்டியில் இளவெட்டி விநாயகர் அணியை எதிர்த்து பாசையூர் சென் அன்ரனிஸ்அணிமோதவுள்ளது

★ ★ ★

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஏழு பேர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று மாலை 3.30 மணிக்கு சண்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் 4-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து அண்ணா விளையாட்டுக்கழகமும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரிமைதானத்தில் மோதுகின்றன.

## மூதூர்

வர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## குடபங்கோணம

பல போன்ற வாசகங்கள் காணப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைத் தேடும் பணியில் தமிழகப் பொலிசார் உசார்படுத்தப்பட்டுள்ளனர் எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது

## தீவகமக்களுக்கு இருப்பிட வசதி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையினால் தீவகப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கு குடிசை வசதி அளிக்கும் நோக்கத்துடன் ஆனைக்கோட்டை சந்திப்பகுதியில் முதற்கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. [05]

## இந்திய தூதரக அதிகாரி நேற்று விடுவிக்கப்பட்டார்

பாகிஸ்தானிய புலனாய்வுத் துறையினரால் கடத்திச் செல்லப்பட்டதாக கூறப்படும் இந்திய தூதுவராலய அதிகாரி ராஜேஸ் மித்தல் நேற்று விடுவிக்கப்பட்டார்.

அவரை இஸ்லாமாபாத் பொலிஸ் நிலையம் ஒன்றில் ஆறு மணி நேரம் தடுத்து வைத்திருந்து சித்திரவதை செய்து விசாரணை செய்துள்ளனர் என்று இந்திய தாப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிட்டத்தட்ட உணர்வு இழந்த நிலையில் அவர் விடுவிக்கப்பட்டதாகவும் ராஜேஸ் மித்தலின் உடலில் பலத்த ஊமைக் காயங்களுள்ளதென்பட்டதாகவும் ஆகாஸவாணியின் இஸ்லாமாபாத் செய்தியாளர் சுரேஸ் சோப்ரா கூறுகிறார். அவருக்கு உயர் அழுத்த மின்சாரம் திரும்பத் திரும்பக் கொடுக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதால் நடக்க முடியாதிருந்ததாகவும் அதனால் அவரைத் தூக்கிக் கொண்டு போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தாக்கப்பட்டது குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சிடம் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. ராஜேஸ் மித்தலை நம்பத்தாகவென்று பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்)

## கர்நாடக வன்முறையில் 3 பேர் பலியாகினர்

(சென்னை)

கர்நாடக மாநிலத்தில் இடமனூர் கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் பற்றி மஜிஸ்திரேட் விசாரணை ஒன்றிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது அங்கு நிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருப்பினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற வன்முறைச்சம்பவங்களிலும் பின்னர் பொலிசார் நடத்தியதுப்பாக்கிப் பிரயோகத்திலும் மூன்று பேர் உயிரிழந்ததுடன் பதினொரு பேர் காயமடைந்துள்ளனர்.

## கண்டனப் பொதுக் கூட்டங்கள்

ஜெயலலிதா அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து இம் மாதம் 29, 30 ஆகிய திகதிகளில் தமிழகம் முழுவதும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

இதனைத் தி. மு. க. தலைமையில் தேசிய முன்னணி மற்றும் இடது சாரிக் கட்சிகளின் கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது. இத் தகவலைத் தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியிருக்கிறார்.

## புலிகளின்

ரடித் தாக்குதலில் இராணுவ காவலரண் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

காவலரணில் இருந்த ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஏனையோர் காயங்களுடன் முகாம்களிற்குள் தப்பி ஓடிவிட்டனர்

இததாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இராணுவத்தினருக்கு உதவியாக அருகிலிருந்த காவலரண்களிலிருந்து தாக்குதல் நடாத்தியவாறு இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்.

இவர்கள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டு இவர்களை தடுத்து நிறுத்திவிட்டனர். இத் தாக்குதலின்போது இராணுவ தரப்பில் சேத விபரம் தெரியவில்லை.

அத்துடன் இராணுவத்தினருக்கு மேலதிக உதவியாக மண்கிண்டி, முந்திரிகைக்குள இராணுவ முகாம்களிலிருந்து எறிகணை வீச்சும் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவங்களின் போது போராளிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இத்தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் மூன்றுபேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஐ,நா.அதிகாரி

அனுப்பப்படுவது தெரிந்ததே. இவ்வாறு திருப்பி அனுப்பப்படும் இவ் அகதிகளை மீண்டும் இங்கு குடியமர்த்துவது, இவர்களுக்கான உதவிகளை வழங்குவது,மறுவாழ்வுத்திட்டங்கள் போன்றவை பற்றி விடுதலைப் புலிகளுடனும் மற்றும் அரச அதிகாரிகள் தொண்டர் அமைப்புகளுடனும் கலந்துரையாடுவதற்காகவே ஐ நா.அதிகாரிகள்இங்கு வந்துள்ளனர்.

ஐ.நா. அகதிகள் தூதரக அகதிகள் விவகார பொறுப்பதிகாரி திரு நிக்கலஸ்மடு அகதி முகாம் பொறுப்பதிகாரி திரு. லூயிஸ் ஆகிய இருவருமே நேற்று இங்குவந்தவர்களாவர்.

## புலிகளைத்

எடுத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. அரசின் ஏதேச்சதிகாரமானதும் ஜனநாயக விரோதமான இந்தச்செயலை மத்திய குழு வன்மையாக கண்டிக்கிறது. மக்கள் கரிசனை கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையைப் பாராளுமன்ற உறுப்பினர் பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கான உரிமையை அரசு பிடிவாதமாக மறுத்திருப்பதன் மூலம் மக்கள் இந்தப் பிரச்சினைகள் குறித்த உண்மைகளைத் தெரிந்துகொள்ளும் உரிமையையும் அரசு நிராகரித்துள்ளது. அரசு எதிர்க்கட்சிகளுடன் முரண்டு பிடிப்பதையும், ஒத்துழைக்க மறுப்பதையும் கைவிடும் வரை சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பாராளுமன்றக் குழு இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு பற்றாது என்று சுதந்திரக் கட்சி மத்திய குழு தீர்மானித்துள்ளது. அத்துடன் புலிகளைத் தடை செய்யுமாறு கோரியும் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள் யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.